**மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**கும்முடிப்பூண்டி**

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C. 133/2025 | காவல் நிலையம்: கும்மிடிப்பூண்டி | |
| பெயர் : சிவா | அ.சா. 1 | நாள் : 03.11.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா. 1 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவா | தாலுக்கா | : | கும்முடிப்பூண்டி |
| தந்தை பெயர் | : | துரைகண்ணன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | மங்காவரம் | வயது | : | 58 |

( எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் மங்காவரம் கிராமத்தில் பூர்விகமாக வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 4 வருடங்களுக்கு முன்பாக (தேதி மாதம் வருடம் ஞாபகமில்லை) மங்காவரம் பொன்னியம்மன் கோவிலில் கதவை உடைத்து ஒரு மாங்கல்யமும் (கிராம் எத்தனை என்று தெரியவில்லை) தலா கால் சவரன் எடைகொண்ட இரண்டு தாலி பொட்டுகளையும் யாரோ எடுத்து சென்றுவிட்டார்கள். பின்னர் அதே தேதியில் காலை 10–11 மணிக்கு கும்மிடிப்பூண்டி காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். அந்த புகார் என்னிடம் காட்டப்படுவது தான். (**அந்த புகார் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அந்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியாது. புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும் நான் கையொப்பம் மட்டும் இட்டேன் என்றாலும் சரிதான். பொருட்கள் காணாமல் போன 4 நாட்கள் கழித்து தான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையில் 7 கிமீ தூரம் என்றாலும், இரு சக்கர வாகனத்தில் சென்றால் 20 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். புகார் அளிக்க ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் அளிக்க செல்லும்போது

ராமச்சந்திரன், ராஜேந்திரன், சிவா, இளவரசன் (பட்டியல் சாட்சிகள் 2,3,6 மற்றும் 7) ஆகியோர்களுடன் சென்றேன் என்றால் சரிதான். அவர்கள் என் ஊர்காரர்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து போலிசார் அவர்களிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். காணாமல் போன பொருட்களை யார் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

ராமச்சந்திரன், ராஜேந்திரன், சிவா, இளவரசன் (பட்டியல் சாட்சிகள் 2,3,6 மற்றும் 7) ஆகியோர்களிடம் எதற்காக காவல் நிலையத்தில் கையொப்பம் பெறப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**(மறுவிசாரணைக்கு குறுக்கு விசாரணை இல்லை.)**

ஓம்/- சிவா

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R

Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2025.11.03 12:15:13 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி